1979 ஏப்ரல் 25]

(முற்பகல் 9.50)

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் நம்மைச் சரிக்கட்டுவதற்கென்று தாமரைக் குளத்திற்கு மட்டும் எஸ்டிமேட் போட்டிருக்கிறார்கள். மீதி குளங்களுக்கும் எஸ்டிமேட் போட்டு விவசாயிகள் பயனடைகின்ற வகையில் செய்வார்களா ? அதுமட்டும் அல்லாமல் அந்தப் பகுதி யிலுள்ள வரட்சியைப் போக்குவதற்காக அழகர் அணைத்திட்டம் என்ற அந்தத திட்டத்திற்கு மாண்புமிகு திரு. சாதிக் பாட்சா அவர்கள் அடிக்கல்லை மட்டும நாட்டிவிட்டுப் போய்விட்டார்கள். அது வெகு நாட்களாக பெண்டிங்கிலே இருக்கிறது. ஆகவே, அதையும் செய்து முடிப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

* மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, தாமரைக்குளத்தைத் தவிர மற்ற குளங்களான பாதரன்குளம், கப்பாங்குளம், சிறுக்குளம் ஆகியவை வில் ராயன் குளம் தொகுதியைச் சார்ந்தவை. இவைகள் எல்லாம் ஒரே குரூப்பிலே இருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் சிற்றா றிலே இருந்து தண்ணீர் வருகின்றது. தாமரைக் குளம் சிற் றாற்றின் இடப்பக்கத்திலே அமைந்துள்ளது. கான்சாபூரம் கிராம மக்களின் கோரிக்கைக்கு இணங்க தாமரைக் குளம் பிள வுக்கல் அணைத் திட்டத்தில் இப்போது சேர்க்கப்பட்டுள்ளது, மேலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் அழகர் அணைத் திட்டத் திற்கு மாண்புமிகு திரு. சாதிக் பாட்சா அவர்கள் அடிக்கல்லை மட்டும் நாட்டிவிட்டுச் சென்றதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் சொன்னார்கள். பழைய அரசின் காலத் திலே அடிக்கல்லை மட்டும்தான் நாட்டினார்கள் என்ற பிரச் சினை இருந்ததே ஒழிய அவர்கள் படிக்கல்லை நாட்டவில்லை.

ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு விவசாயிகளுக்குப் பயன் அளிக்கக்கூடிய வகையில் நல்ல பல திட்டங்களை ஏற்படுத்துவதற்காக ஆவன செய்து பல திட்டங்கள் ஆய்விலே இருந்துகொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பச்சையாறு அணைத் திட்டம்.

*வினா எண். 821—திரு. மு. ஜான் வின்செண்ட் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நாங்குநேரி வட்டத்தில் பச்சையாறு அணைத்திட்ட வேலை தற்போது எந்நிலையில் உள்ளது ?

[1979 ஏப்ரல் 25

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பச்சையாற்றின் குறுக்கே 133 மில்லியன் கன அடி கொள்ளளவு உள்ள அணைக் கட்ட முதலில் திட்டமிடப்பட்டது. இதனைப் பரிசீலித்த பிறகு, இந்நீர்த் தேக்கத்தின் கொள்ளளவை 350 மில்லியன் கன அடி உள்ளதாக மாற்றி அமைக்கலாம் எனக் கருதப்பட்டது. இது குறித்து விரிவான ஆய்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

திரு. மு. ஜான். வின்சென்ட்: பேரவைத் தலைவர்களே, 1973 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு இருக்கும் போது கலைஞர் கருணாநிதி அவர்கள் இந்த அணை கட்டுவதற்கான அடிக்கல்லை நாட்டி இருக்கிறார்கள். இதன் மூலமாக 173 குளங்கள் பயன்பெறுவதற்காக இந்த பாசனக் கால்வாய்கள் நிறுவப்பட இருக்கின்றன. மேலும் $4\frac{1}{4}$ கோடி ரூபாய் எஸ்டிமேட் போடப்பட்டதாக அறிகிறேன். இந்த ஆண்டிலேயே ஏற்பாடு செய்யப்படுமா? அங்கே ஏராளமான தண்ணீர் வந்து அது வீணாகக் கடலிலே கலக்கின்றது. ஆகவே, இந்த அரசு விரைவில் ஆவன செய்து அணையைக் கட்ட தீவிர நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, பச்சையாற்றின் குறுக்கே அணை கட்ட திட்டமிட்டு கடந்த கால அரசு 1975–76 ஆம் ஆண்டில் 4 கோடியே 64 இலட்சம் ரூபாயில் ஒரு திட்டத்தை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அந்தத் திட்டத்தின் மூலமாக 10,203 ஏக்கர் மற்றும் 3,313 ஏக்கர் புஞ்சை நிலங்களுக்குப் பாசன வசதியை உறுதிப்படுத்துகிற வகையில் ஒரு திட்டத்தைக் கொடுத்தார்கள். அது அப்போது ஏற்படுத்தப்பட்ட திட்டம். 133 மில்லியன் கன அடி தண்ணீர் கொள்ளளவில் அணை கட்டும் திட்டம். ஆனால் அதை மீண்டும் பரிசீலனை செய்யும்போது நீர்த் தேக்கத்தின் கொள்ளளவை அதிகப்படுத்தி கூடங்குளம் அருகே அமைக்கப்பட இருக்கும் அணுமின் நிலையத்திற்கு வேண்டிய தண்ணீரையும் பச்சையாறு நீர்த்தேக்கத்தில் இருந்தே கொடுக்க வகை செய்யும்படியாக திட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டது. அதற்குப் பிறகு இந்த ஆற்றின் குறுக்கே ஆய்வுகளை எடுத்து, நில அளவுகள் போன்றவைகளையும் ஆய்வு செய்து மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. நீரியல் சம்பந்தமாக ஆற்றின் குறுக்கே அளவு எடுத்தல், நில அளவு, மட்ட அளவு போன்ற மதிப்பீடு தயாரிக்க வேண்டிய விஷயங்களை வனத் துறையினரின் எல்லைக்குள் சென்று சேகரிக்க வேண்டியுள்ள காரணத்தால் பொதுப் பணித் துறையின் பொறியாளர்கள் வனத்துறை அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. ஜான் வின்சென்ட் : தலைவரவர்களே, கடந்த ஆண்டில் இதே கேள்வியைக் கேட்கும்போது அமைச்சரவர்கள் 'மிக விரைவிலே செயல்படுத்தப்படும்' என்று கூறினார்கள். ஆகவே இந்த ஆண்டிலாவது, தண்ணீர் வீணாகக் கடலிலே கலப்பதைத் தடுக்கின்ற வகையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, நான் சொல்லியதைப்போல் கடந்த 4—11—1978-லேயிருந்து பொதுப்பணித் துறை பொறியாளர்கள் வனத்துறை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அங்கே வனத்தின் ஊடே சென்று ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டி இருக்கிறது. ஆனால் வனத்துறையின் அதிகாரிகள் பொறியாளர்களுக்கு வனத்தில் பிரவேசிக்க இடம் கொடுக்க மறுக்கிறார்கள். ஆனாலும் அரசு பேச்சு வார்த்தை நடத்தி சுமுகமான ஒரு நல்லெண்ணத்தின் அடிப்படையிலே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Small Scale Industries.

***Q. No. 822:** Thiru S. M. Vasan : Will the Hon. the Minister for Rural Industries be pleased to State :

(a) Whether a number of Small Scale Industries financed by the State Financing bodies are reported sick; and

(b) the details thereof?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :—

(அ) மேலும் (ஆ) ஒரு * விவர அறிக்கை இந்த அவையின் முன் வைக்கப்படுகிறது.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, சிறு தொழில்கள் நலிவு பெறுவது எதனாலென்றால் பெரும்பாலும் மூலப் பொருள்கள் பெறுவதிலும் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்கவும் தான் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, உத்தரவாதப்படுத்தும் வகையில் அரசு அந்த மூலப் பொருள்களை விநியோகிப்பதற்கும் உற்பத்தி பொருளை விற்பதற்கும் வாய்ப்பளிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, நேற்றைய தினம் கூட மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொழில் வளர்ச்சி பற்றிய கொள்கை குறிப்பின் மீது மேலவையில் பதில் அளிக்கும்போது திட்டவட்டமாக இதைப்பற்றி

[* 474ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது]